பெரியவாச்சான்பிள்ளை அருளிச்செய்த
ரஹஸ்யத்ரய தீபிகை

''ப்ராப்யஸ்ய ப்ரஹ்மணோ ரூபம் ப்ராப்துச்ச ப்ரத்யகாத்மந:, ப்ராப்த்யுபாயம் பலம் ப்ராப்தேஸ் ததா ப்ராப்திவிரோதி ச, வதந்தி ஸகலா வேதாஸ் ஸேதிஹாஸ புராணகா:, முநயச்ச மஹாத்மானோ வேதவேதாந்தவேதிந:'' என்கிறபடியே ஸகல வேதாந்தப்ரதிபாத்யமான அர்த்த பஞ்சகத்தைத் திருமந்த்ரத்தில் விவரிக்கிறபடி எங்ஙனேயென்னில்: ப்ரணவத்தில் அர்த்த பஞ்சகத்தை விவரிக்கிறபடி எங்ஙனேயென்னில்: மகாரத்தாலே ஸ்வஸ்வரூபம் சொல்லிற்று. அகாரத்தாலே பரஸ்வரூபம் சொல்லிற்று. உகாரத்தாலே விரோத்யுபாயங்களைச் சொல்லிற்று. அகாரத்தில் சதுர்த்தியாலே புருஷார்த்தஸ்வரூபம் சொல்லிற்று.

அகாரத்தில் அர்த்தபஞ்சகத்தை விவரிக்கிறபடி எங்ஙனேயென்னில்: அகாரத்தால் பரஸ்வரூபமும், அதில் சதுர்த்தியாலே ஸ்வஸ்வரூபபுருஷார்த்தஸ்வரூபங்களையும், அதில் 'அவ-ரக்ஷணே' என்கிற தாதுவினாலே விரோத்யுபாயங்களையும் சொல்லிற்று. ப்ரணவத்தில் லுப்தசதுர்த்தியாலே சேஷத்வத்தைச்சொல்லி, அகாரத்தாலே சேஷத்வ ப்ரதிஸம்பந்தியைச் சொல்லி, மகாரத்தாலே சேஷத்வாச்ரயஞ்சொல்லி, அவதாரணத்தாலே சேஷத்வத்தினுடைய அநந்யார்ஹதையைச்சொல்லி, ஸ்வஸ்வரூபம் சொல்லிற்று.

அகாரத்தாலே ரக்ஷகனைச் சொல்லி மகாரத்தாலே ரக்ஷ்யவஸ்துவைச்சொல்லி சதுர்த்தியாலே ரக்ஷ்யரக்ஷகபாவத்துக்கு வேண்டும் உறவு சொல்லி, அவதாரணத்தாலே ரக்ஷ்யரக்ஷகங்களினுடைய லக்ஷ்யலக்ஷணம் சொல்லுகையாலே உபாயம் சொல்லிற்று. ப்ரணவத்தாலே ஆத்மஸ்வரூபம் சொல்லிற்று. 'நாராயண" பதத்தாலே பரமாத்மஸ்வரூபம் சொல்லிற்று. சதுர்த்தியாலே புருஷார்த்த ஸ்வரூபம் சொல்லிற்று, நமஸ்ஸில், (ம:) என்கிற இத்தாலே விரோதிஸ்வரூபம் சொல்லிற்று. (ந:) என்கிற இத்தாலே உபாயஸ்வரூபம் சொல்லிற்று. ஆகையாலே; ஸகலவேதார்த்த ப்ரதிபாத்யமான அர்த்த பஞ்சகம் சொல்லிற்றாயிற்று.

"இவ்வாத்மாவுக்கு எம்பெருமான் கட்டின ஸூத்ரம் திருமந்த்ரம்" என்று பிள்ளை திருநறையூரரையர் அருளிச்செய்வர். ஸம்ஸாரவர்த்தகமான தாலிக்கயிறு பதினறிழையாய், இரண்டு சரடாயிருக்கும். கைங்கர்யவர்த்தகமான மங்களஸூத்ரம் எட்டிழையாய் மூன்று சரடாயிருக்கும். ஸ்வரூபத்தினுணர்த்தியைப்பற்றியிருப்பதொரு சரடும்; ஸ்வரக்ஷணத்தில் அசக்தியைப்பற்றியிருப்பதொரு சரடும்; ஸ்வரூபத்தினுணர்த்தியாலும், ஸ்வரக்ஷணத்தில் அசக்தியாலும், பலித்த அர்த்தம் ஈச்வரனைப் பேணுகை; இதை வெளியிட்டிருப்பதொரு சரடுமாயிருக்கும். சேஷத்வஜ்ஞானமில்லாதார்க்கு ப்ரணவத்தில் அந்வயமில்லை, தேஹாத்மாபிமானிகளுக்கு நமஸ்ஸில் அந்வயமில்லை. கைங்கர்யருசியில்லாதார்க்கு நாராயணபதத்தில் அந்வயமில்லை. சேஷத்வஜ்ஞானமிருக்கும்படியை இளையபெருமாள் ஆசரித்துக்காட்டினார்; ஈச்வரசேஷபூதன் அந்யசேஷத்வநிவர்த்தகனென்றும், விலக்ஷணநிரூபகனென்றும், அஹங்காரநிவர்த்தகனென்றும், ததீயபரதந்த்ரனென்றும், தத்ஸம்பந்தயுக்தனென்றும், கிங்கரத்வபாவனென்றும் தன்னை அநுஸந்திப்பான்.

ப்ரமாணப்ரமேயப்ரமாதாக்களைச்சேர அநுஸந்திக்கும்படி:— ஆத்மாவுக்கு ஸ்வரூபம் அநந்யார்ஹசேஷத்வம்; ஏதத்ப்ரகாசம் ப்ரணவம்; அநந்யார்ஹசேஷத்வப்ரதிஸம்பந்தி பெருமாள் பொருந்தவிட்ட திருவடிகள். ஆத்மாவுக்கு ஸ்வரூபம் அநந்யசரணத்வம்; ஏதத்ப்ரகாசகம் நமஸ்ஸு; அநந்யசரணத்வப்ரதிஸம்பந்தி, பெருமாளமைத்த திருக்கை. ஆத்மாவுக்கு ஸ்வரூபம், அநந்யபோக்யத்வம்; ஏதத்ப்ரகாசகம் நாராயணபதம்; அநந்யபோக்யத்வப்ரதிஸம்பந்தி பெருமாள் திருமுறுவல். இதுக்குக் கருத்து:— தானறிகை, சேதனமறிகை. ஸாராந்தரமறிகை. அதாவது:— பேறறிகை, வ்யாபாரமறிகை, விஷயாந்தரமறிகை. ஸ்வாதந்த்ர்யம் மேலிட்டால் ப்ரணவத்தில் ப்ரதமாக்ஷரத்தின் அர்த்தத்தை அநுஸந்திப்பான். இதரர் பக்கல் சேஷத்வப்ரதிபத்தி நடையாடிற்றாகில், உகாரார்த்தத்தை அநுஸந்திப்பான். 'தேஹோர்ஹம்' என்றிருந்தானாகில், மகாரார்த்தத்தை அநுஸந்திப்பான், ஸ்வரக்ஷணவிஷயத்தில் கரைந்தானாகில், நமச்சப்தார்த்தத்தை அநுஸந்திப்பான். ஈச்வரவிபூதிகளோடே கலங்கா நின்றானாகில், நாரசப்தார்த்தத்தை அநுஸந்திப்பான் ஆபாஸபந்துக்கள் பக்கல் பந்துத்துவம் நடையாடிற்றாகில், அயநசப்தார்த்தத்தை அநுஸந்திப்பான். சப்தாதிவிஷயங்களிலே போக்யதாபுத்தி நடையாடிற்றாகில், 'ஆய' சப்தார்த்தத்தை அநுஸந்திப்பான்.

ப்ரமாணம் பதத்ரயாத்மகமாயிருக்கும். ப்ரமேயம் பர்வத்ரயாத்மகமாயிருக்கும் அதிகாரி ஆகாரத்ரயாத்மகமாயிருக்கும். ப்ரமாணம் பதத்ரயாத்மகமாகையாவது:— ப்ரதமபதம், மத்யமபதம் த்ருதீயபதம். பர்வத்ரயாத்மகமாகையாவது:- பொருந்த விட்ட திருவடிகளும், அஞ்சலென்ற திருக்கையும், சிவந்த திருமுகமண்டலமும். அதிகாரி ஆகாரத்ரயாத்மகமாகையாவது:- அநந்யார்ஹசேஷபூதனும், அநந்யசரணனும், அநந்ய போக்யனுமிருக்கை. ப்ரதமபதம் அநந்யார்ஹசேஷத்வப்ரகாசகம். பொருந்த விட்ட திருவடிகள் அநந்யார்ஹத்வத்துக்கு ப்ரதிஸம்பந்தியாயிருக்கும். மத்யமபதம் அநந்யசரணத்வத்துக்கு ப்ரகாசகமாயிருக்கும். அஞ்சலென்ற திருக்கை அநந்ய சரணத்துக்கு ப்ரதிஸம்பந்தியாயிருக்கும். த்ருதீயபதம் அநந்யபோக்யத்வப்ரகாசமாயிருக்கும். சிவந்த திருமுதமண்டலம் அநந்யபோக்யத்வப்ரதிஸம்பந்தியாயிருக்கும். திருமந்த்ரத்தாலே திருவபிஷேகத்தை அநுஸந்திப்பான். சரமச்லோகத்தாலே திரு மார்பில் நாச்சியாரோட்டைச் சேர்த்தியை அநுஸந்திப்பான். த்வயத்தாலே திருவடிகளை அநுஸந்திப்பான்.

அர்த்தபஞ்சகத்தையும் ரஹஸ்யத்ரயத்திலே சொல்லுகிறபடி எங்ஙனே யென்னில்; திருமந்த்ரத்தில் நாராயணபதத்தாலே பரமாத்மஸ்வரூபம் சொல்லி, ப்ரணவத்தாலே ஆத்ம ஸ்வரூபம் சொல்லி, சதுர்த்தியாலே புருஷார்த்தஸ்வரூபம் சொல்லி, **'நம:'** என்று உபாய ஸ்வரூபம் சொல்லி, நமச்சப்தத்திலே ஷஷ்ட்யந்தமான மகாரத்தாலே விரோதிஸ்வரூபம் சொல்லிற்று. சரமச்லோகத்தில் **'மாம்' 'அஹம்'** என்கிற பதங்களாலே பரமாத்ம ஸ்வரூபம் சொல்லிற்று. **'வ்ரஜ'** என்கிற மத்யமனாலும், **'த்வா' 'மா சுச:'** என்கிற பதங்களாலும் ஸ்வஸ்வரூபம் சொல்லிற்று **'ஸர்வபாபேப்யோ மோக்ஷயிஷ்யாமி'** என்கையாலே அநிஷ்டநிவ்ருத்திபூர்வகமான புருஷார்த்த ஸ்வரூபம் சொல்லிற்று. **'ஸர்வபாப்பேப்ய:'** என்று விரோதிஸ்வரூபம் சொல்லிற்று. ஏகபதத்தாலே உபாயஸ்வரூபம் சொல்லிற்று. த்வயத்தில் ஸ்விசேஷமான நாராயண பதத்தாலே பரமாத்மஸ்வரூபம் சொல்லிற்று. **'ப்ரபத்யே'** என்கிற உத்தமனாலே ஆத்ம ஸ்வரூபம் சொல்லிற்று. சதுர்த்தி நமஸ்ஸுக்களாலே புருஷார்த்தஸ்வரூபம் சொல் லிற்று. நமச்சப்தத்தில், மகாரத்தாலே விரோதிஸ்வரூபம் சொல்லிற்று. **'சரணௌ' 'சரண'** பதங்களாலே உபாயஸ்வரூபம் சொல்லிற்று. ஸ்வரூபம் சொல்லுகிறது திருமந்த்ரம். ஸ்வரூபாநுரூபமான உபாயத்தை விவரிக்கிறது சரமச்லோகம். இவ் விரண்டர்த்தத்திலும் ருசியுடையாருடைய அநுஸந்தான ப்ரகாரம் த்வயம். சாஸ்த்ர ருசிபரிக்ருஹீதம் திருமந்த்ரம். சரண்யருசிபரிக்ருஹீதம் சரமச்லோகம். ஆசார்யருசி பரிக்ருஹீதம் த்வயம். ப்ராப்யப்ரதாநம் திருமந்த்ரம். ப்ராபகப்ரதாநம் சரமச்லோகம். புருஷகாரப்ரதாநம் த்வயம். ஆசார்யாங்கீகாரம் உடையவனுக்கு ஆசார்யன் இரங்கி திருமந்த்ரத்தில் உபதேசித்த அவ்வர்த்தத்தை க்ரமச: அநுஸந்திக்கும்படி சொல்லு கிறது. ஈச்வரசேஷபூதன், அந்யசேஷத்வநிவர்த்தகன், விலக்ஷணநிரூபகன், ததீய பரதந்த்ரன், தத்ஸம்பந்தயுக்தன், கிங்கரஸ்வபாவனென்று தன்னை அநுஸந்திப்பது.

ஸவிபக்திகமான அகாரத்தை அநந்தராக்ஷரத்வயம் விவரிக்கிறது. அவ்வக்ஷரத்வயத்தையும் மந்த்ரசேஷபதத்வயம் விவரிக்கிறது. அப்பதத்வயத்தையும் த்வயத்தில் வாக்யத்வயம் விவரிக்கிறது. அவ்வாக்யத்வயத்தையும் சரமச்லோகத்தில் அர்த்தத்வயம் விவரிக்கிறது. அதில் அகாரத்தை அக்ஷரத்வயத்தில் ப்ரதமாக்ஷரம் விவரிக்கிறது. விபக்தியை அநந்தராக்ஷரம் விவரிக்கிறது. அதில் ப்ரதமாக்ஷரத்தை ப்ரதமபதம் விவரிக்கிறது. அநந்தராக்ஷரத்தை அநந்தரபதம் விவரிக்கிறது. அதில் ப்ரதமபதத்தை ப்ரதமவாக்யம் விவரிக்கிறது அநந்தரபதத்தை அநந்தரவாக்யம் விவரிக்கிறது. இதில் பூர்வவாக்யத்தைப் பூர்வார்த்தம் விவரிக்கிறது. உத்தரவாக்யத்தை உத்தரார்த்தம் விவரிக்கிறது. அதில் சேஷத்வப்ரதிஸம்பந்தியைச் சொல்லுகிற அகாரத்துக்கு அநந்யார்ஹசேஷத்வவாசகமான உகாரம் விவரணமாகிறபடி எங்ஙனே? என்னில்: அகாரவாச்யனுடைய சேஷித்வம் ஆச்ரயாந்தரங்களிலும் கிடக்குமோ? அநந்யஸாதாரணமாயிருக்குமோ? என்று ஸந்திக்தமானால், அதனுடைய அநந்யஸாதாரணத்வப்ரகாசமாகையாலே, உகாரம் அகாரவிவரணமாகிறது. எங்ஙனேயென்னில்: உகாரத்தில் சொல்லுகிற சேதனனுடைய அநந்யார்ஹசேஷத்வம் ஸித்திப்பது அதற்கு ப்ரதிஸம்பந்தியான சேஷித்வம் ஓரிடத்திலேயானால்; அங்ஙனன்றியிலே, அநேக சேஷிகளாகில், அநந்யார்ஹசேஷத்வம் ஸித்தியாது. ஆகையாலே அகாரவாச்யனுடைய ஸமாப்யதிகதாரித்ர்யத்தைச் சொல்லிற்றாயிற்று. சதுர்த்தியில் சொல்லுகிற சேஷத்வத்துக்கு ஆச்ரயவிஷயப்ரகாசகமாய்க்கொண்டு விவரணமாகிறது மகாரம். நிராச்ரயமாக தர்மத்துக்கு ஸ்திதியில்லையே. பகவத்வ்யதிரிக்தரைத் தன்னோடு பிறரோடு வாசியற அந்யராகச்சொல்லி, அவர்களுக்கு அநர்ஹன் இச்சேதனன் என்கிறது உகாரம். இதில் கழிகிற தேவதாந்தராதிமாத்ரத்தாலே அந்யசப்தத்துக்குப் பூர்த்தியில்லாமையாலே அவ்வந்யசப்தத்தில் அந்விதனான தன்னையும் கழித்து, அநந்யார்ஹத்வத்தைப் பூரிக்கிற முகத்தாலே உகாரவிவரணமாகிறது நமச்சப்தம். **'அஹமபி ந மம'** என்கிறபடியே ஸவரக்ஷணத்தில் ப்ராப்தியில்லாத அத்யந்தபாரதந்த்ர்யத்தைச் சொல்லுகிறது நமச்சப்தத்திலேயிறே; ஆகையாலே உகாரவிவரணமாகிறது நமச்சப்தம். சேஷத்வத்துக்கு ஆச்ரயவிசேஷப்ரகாசகமான மகாரவாச்யனுடைய சேஷத்வபூர்த்தி ப்ரகாசிப்பது **'அகிஞ்சித்கரஸ்யசேஷத்வாநுபபத்தி:'** என்கிறபடியே கிஞ்சித்காரத்தாலேயாகையாலே, கிஞ்சித்காரப்ரகாசகமாய்க்கொண்டு மகாரவிவரணமாகிறது நாராயணபதம். அத்யந்தபாரதந்த்ர்யப்ரயுக்தமாய் வருகிற உபாயவேஷத்தினுடைய ஸ்வரூபமென்ன, இதிலிழிகைக்கு ஏகாந்தமான துறையென்ன, அவ்வுபாயமாகச் செய்யவேண்டும் அம்சமென்ன, இவற்றை ப்ரகாசிப்பிக்கையாலே நமச்சப்த விவரணமாகிறது, த்வயத்தில் பூர்வவாக்யம். கைங்கர்யப்ரதிஸம்பந்தி ஒருமிதுநமென்னுமிடத்தையும், அதற்குக்களையான அம்சத்தையும் ஒழித்துத் தருகையாலே நாராயணசப்தத்துக்கு விவரணமாகிறது த்வயத்தில் உத்தரவாக்யம். அவ்வுபாயஸ்வீகாரம் ஸாதநாந்தரநிவ்ருத்திபூர்வகமாகையாலே, தத்ப்ரகாசகமாய்க்கொண்டு பூர்வவாக்யத்துக்கு விவரணமாகிறது பூர்வார்த்தம். உத்தரவாக்யத்தில்

சொன்ன ப்ராப்யஸித்தி விரோதி நிவ்ருத்திபூர்வகமாகக்கடவதென்று விவரிக்கிறது உத்தரார்த்தம்.

ஸர்வாதிகாரமாயும், அதிக்ருதாதிகாரமாயும், ஆசார்யருசிபரிக்ருஹீதமாயுமிருந்துள்ள வாக்யத்வயத்தில் பூர்வவாக்யம் ப்ராபகமாயிருந்ததேயாகிலும், பதத்ரயாத்மகமாயும் அர்த்தத்ரயாத்மகமாயும் இருக்கும். இதில் **"ஸ்ரீமந்"** என்கிற பதம் புருஷகாரம். **"சரணம் ப்ரபத்யே"** என்கிறபதம் அதிகாரிக்ருத்யம். நடுவே **"நாராயணசரணௌ"** என்கிறபதம் உபாயம். உபாயம் புருஷகாரஸாபேக்ஷமாயும் அதிகாரிஸாபேக்ஷமாயும் இருக்கும். பலத்தில் வந்தால் அந்யநிரபேக்ஷமாயும் இருக்கும். உத்தரவாக்யமும் பதத்ரயாத்மகமாயிருக்கும். அதில் **"ஆய"** என்கிறவிடம் கைங்கர்யத்தைச் சொல்லுகிறது. இதுக்குக்கீழ் கைங்கர்யப்ரதிஸம்பந்தியைச் சொல்லுகிறது. மேலில் பதம் கைங்கர்யத்தில் களையறுக்கையைச் சொல்லுகிறது.

நம்மாசார்யர்கள் திருமந்த்ரத்தையும் சரமச்லோகத்தையும் த்வயத்திலே அநுஸந்திக்கும்படி:- இதுதான் உபாயோபேயம் இரண்டையும் சொல்லுகையாலே த்வயமென்கிறது. திருமந்த்ரத்தில் உபேயப்ராதாந்யேந சொல்லுகிற அர்த்தத்தையும், சரம ச்லோகத்தில் உபாயப்ராதாந்யேந சொல்லுகிற அர்த்தத்தையும், இதில் பூர்வவாக்யத்தாலும், உத்தரவாக்யத்தாலும் சொல்லுகிறது. எங்ஙனேயென்னில்: அகாரத்தில் ஸ்வரூபாநுபந்தித்வத்தால் சொல்லுகிற லக்ஷ்மீஸம்பந்தத்தையும், நாராயணபதத்திலே பிராட்டிக்கும் அந்தர்ப்பாவமுண்டாகையாலே வருகிற லக்ஷ்மீஸம்பந்தத்தையும், த்வயத்தில் உத்தரவாக்யத்தில் **"ஸ்ரீமதே"** என்கிற பதத்தாலே சொல்லுகிறது. அகாரத்திலே சொல்லுகிற ஸர்வ ரக்ஷகத்வத்தையும், அதில் விவரணமான நமஸ்ஸில் சொல்லுகிற அத்யந்தபாரதந்த்ர்யத்தையும், தத்ப்ரவ்ருத்தியை ப்ரார்த்திக்கிற சதுர்த்யர்த்தத்தையும், உத்தரவாக்யத்தில் சதுர்த்தியாலே சொல்லுகிறது. திருமந்த்ரத்தில் நமச்சப்தார்த்தமான அஹங்காரமமகாரநிவ்ருத்தியைப் பூர்வவாக்யத்தில் நமஸ்ஸிலே சொல்லுகிறது. ஆக, திருமந்த்ரம் த்வயத்தில் உத்தரவாக்யத்திலே அந்வயித்தது. இனி சரமச்லோகம் உத்தரவாக்யத்திலே அந்வயிக்கும்படி சொல்லுகிறது. **"மாம்"** என்கிற பதத்தில் ஸ்வரூபாநுபந்தித்வத்தால் சொல்லுகிற லக்ஷ்மீஸம்பந்தத்தையும், த்வயத்தில் பூர்வவாக்யத்தில் "ஸ்ரீமத்" பதத்தாலே சொல்லுகிறது. "மாம்" என்கிற பதத்தில் சொல்லுகிற ஸௌலப்யத்தையும், **"அஹம்"** என்கிற பதத்தில் சொல்லுகிற, ஸ்வாமித்வத்தையும், இதில் **"நாராயண"** பதத்தாலே சொல்லுகிறது. **"மாம்"** என்கிற பதத்தில் சொல்லுகிற ஸேநாதூளியும், சிறுசதங்கையும், தாங்கின உழவுகோலும், பிடித்த சிறுவாய்க்கயிறும், நாட்டின திருவடிகளுமாய் நிற்கிற விக்ரஹத்தை த்வயத்தில் **"சரணௌ"** என்கிற பதத்தாலே சொல்லுகிறது. 'ஏக' சப்தத்தால் சொல்லுகிற அவதாரணார்த்தத்தையும், 'சரண' சப்தார்த்தத்தையும், **"ஸர்வபாபேப்யோ மோக்ஷயிஷ்யாமிமா சுச:"** என்கிற விரோதிநிவ்ருத்தியையும், த்வயத்தில் சரணசப்தத்

தாலே சொல்லுகிறது. ''வ்ரஜ'' என்கிற இடத்தில் அர்த்தத்தையும், ''ஸர்வதர்மாந் பரித்யஜ்ய'' என்கிற அர்த்தத்தையும், ''த்வா'' என்கிறவிடத்தில் சொல்லுகிற அதிகாரியையும், ''ப்ரபத்யே'' என்கிறக்ரியாபதத்தாலே சொல்லுகிறது. தர்மத்யாகம் அங்கே உண்டோ? என்னில்: உபாய ஸ்வீகாரம், உபாயாந்தரநிவ்ருத்திபூர்வகமாக வல்லது நில்லாமையாலே, ஸ்வீகாரம் சொன்னவிடத்திலே த்யாகம் சொல்லுகிறது. ஆக, சரமச்லோகம் த்வயத்தில் பூர்வவாக்யத்திலே அந்வயித்தது. திருமந்த்ரத்திலும், சரமச்லோகத்திலும் சொல்லுகிற அர்த்தம் த்வயத்திலே சேர அநுஸந்திக்கும்படி சொல்லிற்றாயிற்று. சரமச்லோகத்தாலே பூர்வகண்டத்தை விசதீகரிக்கிறது. திருமந்த்ரத்தாலே உத்தரகண்டத்தை விசதீகரிக்கிறது. ''மாம்'', ''அஹம்'' என்கிற பதங்களில் லக்ஷ்மீஸம்பந்தத்தை, பூர்வகண்டத்தில் 'ஸ்ரீமத்' பதத்தாலே சொல்லுகிறது. ''மாம்'', ''அஹம்'' என்கிற பதங்களில் ஸௌசீல்யஸர்வஜ்ஞத்வாதிகளை த்வயத்தில் பூர்வகண்டத்தில் 'நாராயண' பதத்தாலே சொல்லுகிறது. ''மாம்'' என்கிற பதத்தில் விக்ரஹத்தையும், ''ஏகம்'' என்கிற பதத்தில் அர்த்தத: வந்த அவதாரணார்த்தத்தையும் ''சரணௌ'' என்கிற பதத்தாலே சொல்லுகிறது. சரமச்லோகத்தில் 'சரண' சப்தத்தின் அர்த்தத்தையும், இங்குற்ற 'சரண' சப்தத்தாலே சொல்லுகிறது. ''ஸர்வதர்மாந் பரித்யஜ்ய'', ''வ்ரஜ'', ''த்வா'', ''ஸர்வபாபேப்யோ மோக்ஷயிஷ்யாமி மா சுச:'' என்கிற பதங்களின் அர்த்தங்களை ''ப்ரபத்யே'' என்கிற பதத்தாலே சொல்லுகிறது. அகாரத்தில் ஸ்வரூபாநுபந்தியான லக்ஷ்மீஸம்பந்தத்தையும், 'நாராயண' பதத்தில் நாரசப்தத்தின் அர்த்தத்தையும், இங்குற்ற நாராயணலக்ஷ்மீஸம்பந்தத்தையும் உத்தரகண்டத்திலே ''ஸ்ரீமதே'' என்கிற பதத்தில் சொல்லுகிறது. அகாரத்தில் அர்த்தத்தையும், லுப்தசதுர்த்தியில் அர்த்தத்தையும், உத்தரகண்டத்தில் நாராயணபதத்தாலும், சதுர்த்தியாலும் சொல்லுகிறது. ப்ரணவத்தில் மத்யமாக்ஷரத்தையும், நமஸ்ஸின் அர்த்தத்தையும், உத்தரகண்டத்தில் நமஸ்ஸாலே சொல்லுகிறது. மத்ஸ்யத்திலுடைய ஆகாரமெல்லாம் ஜலமயமாயிருக்குமாப்போலே, ஸ்ரீமானுடைய வடிவத்தையும் ஸ்ரீமயமாய் இருக்குமென்று பெரியமுதலியார் அருளிச்செய்வர்.

பெரியவாச்சான்பிள்ளை திருவடிகளே சரணம்.

ரஹஸ்யத்ரயதீபிகை முற்றிற்று.